226—

நிதி திரட்டுதல்

•2135—திரு. பி.ஆர். சுந்தரம்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும், நெடுஞ்சாலைத் துறைக்கும் முன்வைப்புத் தொகை மூலம் நிதி திரட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கும், நெடுஞ்சாலைத் துறைக்கும், முன்வைப்புத் தொகை மூலம், நிதி திரட்டும் கருத்துருக்கள் எதுவும், தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு கடும் நிதி நெருக்கடியில் தள்ளப்பட்டுள்ள சூழ்நிலையில் புதிய பேருந்துகளை முழுமையாக வாங்க இயலாத சூழ்நிலை தற்போது உள்ளது. தற்போது பொதுமக்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில், கொடுக்கப்படுகிற வட்டியின் விகிதம் மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தினால் அவற்றில் பணத்தை எல்லாம் டெபாசிட் செய்வதற்கு தயக்கம் காட்டுகிறார்கள். ஆகவே, போக்குவரத்துக் கழகங்களைத் திறம்பட நடத்துவதற்கு தனியாரிடமிருந்து டெபாசிட்டைப் பெற்று அந்தப் பணத்தின் மூலமாக புதிய வழித்தடங்களில் இயக்க புதிதாக பஸ்கள் எல்லாம் வாங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு நிதி உதவியை ஏற்பாடு செய்வதற்காக, நிதி உதவி பெறுவதற்காக, ஏற்கெனவே 1975 முதல் T.D.F.C.- Tamil Nadu Transport Development Finance Corporation என்று சொல்லக்கூடிய தமிழ்நாடு அரசு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது. அந்த நிதி நிறுவனம் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

2003 ஏப்ரல் 10]

இன்றைக்குப் பொதுமக்களும் T.N.P.L., Power Finance, TIDCO போன்ற அரசு நிறுவனங்களிலும், பெருமளவில் T.D.F.C. தமிழ்நாடு அரசு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திலும் முதலீடு செய்திருக்கிறார்கள். அதன்மூலமாக இன்றைய நிலவரப்படி இந்தத் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்தில் மக்கள் இதுவரை 912.36 கோடி ரூபாயை நிதியாகக் கொடுத்திருக்கிறார்கள், டெபாசிட்டாக கொடுத்திருக்கிறார்கள். அந்த நிதியிலிருந்துதான் இப்போது தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் நிதி வசதியை கடனாகப் பெற்று, இன்றைக்குப் புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு வருகின்றன. அந்த வகையிலே இந்த நிதி நிறுவனம் தொடங்கப்பட்ட நாள் முதல் இன்று வரை மொத்தம் இந்த நிறுவனத்தின் நிதி உதவியின் மூலமாக தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் 32,725 புதிய பேருந்துகளை வாங்கி இருக்கின்றன. இந்தப் பேருந்துகள் வாங்குவதற்கு நிதி உதவி செய்த நிறுவனம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்தான். இப்படி நல்ல நிதி நிறுவனத்தை நாம் பெற்றிருப்பதால், அந்த நிதி நிறுவனத்தை மேலும் விரிவுபடுத்துவதற்கு, அதை வலுப்படுத்துவதற்கு, அதனுடைய நிதியைக் கூட்டுவதற்கு அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் மூலமாக இப்போது அந்த நிதி நிறுவனத்திலிருந்து இந்த ஆண்டுகூட கடனாகப் பெற்று, புதிய பேருந்துகள் வாங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மற்றொன்றையும் இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வட்டி வீதத்தைப் பொறுத்தளவிலே இன்றைக்கு வங்கியினுடைய வட்டி வீதத்தைக் காட்டிலும் தனியார் வட்டி வீதம் கூடுதலாக இருப்பதால், அதனை நம்பி பலர் ஏமாந்துவிடுகிறார்கள். ஆகவே, மக்களுடைய பாதுகாப்பான முயற்சிக்கு போக்குவரத்துக் கழகங்கள் இப்படிப்பட்ட நிதி நிறுவனங்களை உருவாக்குமா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்போது இந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனத்திலே வழங்கப்படுகின்ற வட்டி ஏற்கெனவே வங்கிகள், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் அளித்து வருகின்ற வட்டி வீதத்தைவிட 1 முதல் 1½ சதவீதம் வட்டி கூடுதலாக வழங்கிக்

[2003 ஏப்ரல் 10

கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள், இந்த நிறுவனத்தில் தாங்களும் மற்றும் தங்களுக்கு தெரிந்தவர்களையும் ஈடுபடுத்தி, அங்கே அவர்களுக்கு விளம்பரம் செய்து, இந்த நிதி நிறுவனத்திலே டெபாசிட் செய்யும்படி அவர்களை நான் அன்போடு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சருடைய நீண்ட நெடிய பதிலுரைக்கும், அவர்களுடைய அறிவுரைகளுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 227, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

227—

நியாய விலைக் கடை

•27794—திரு. கே.கே. சிவசாமி:

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், கே. வாகைக்குளம் பகுதியில் நியாயவிலைக் கடை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

அருப்புக்கோட்டை தொகுதி, கே. வாகைக்குளம் பகுதியில் முழு நேர நியாயவிலைக் கடை திறப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. கே.கே. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், கே. வாகைக்குளம், சோலாண்டி மற்றும் பாசிக்குளம் ஆகிய கிராமங்களில் சுமார் 500 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ளன. எனவே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால